இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

இயேசு பேதுருவையும் யாக்கோபையும் யோவானையும் அழைத்து, ஓர் உயர்ந்த மலைக்கு அவர்களை மட்டும் தனிமையாகக் கூட்டிக்கொண்டு போனார். அங்கே அவர்கள்முன் அவர் தோற்றம் மாறினார். அவருடைய ஆடைகள் இவ்வுலகில் எந்த சலவைக்காரரும் வெளுக்க முடியாத அளவுக்கு வெள்ளை வெளேரென ஒளிவீசின. அப்போது எலியாவும் மோசேயும் அவர்களுக்குத் தோன்றினர். இருவரும் இயேசுவோடு உரையாடிக்கொண்டிருந்தார்கள்.
(மாற்கு 9:2-4)

# பெருந்தொற்று காலத்தில் கிறிஸ்தவ தவம் சிறந்தோங்கட்டும்

வத்திக்கான்: தவக்காலத்தில், நம் மனச்சான்றை பரிசோதிக்கவும், இறை வேண்டல், நோன்பு மற்றும், தர்மம் செய்வதன் வழியாக, அனைவரோடும் நல்லுறவை வளர்க்கவும், திருஅவையின் ஆன்மீக மரபு அழைப்பு விடுக்கின்றது

கிறிஸ்தவர்கள், தவக்காலத்தில் தவத்தை மேற்கொள்ளவேண்டும் என்று, திருஅவை விடுக்கும் அழைப்பின் ஆழமான அர்த்தத்தை விளக்கும் மடல் ஒன்றை, பிப்ரவரி 18, இவ்வியாழனன்று, திருஅவையின் மனசாட்சி பேராயத்தின் தலைவர், கர்தினால் மௌரோ பியாசென்சா (Mauro Piacenza) அவர்கள் வெளியிட்டுள்ளார்.

தவக்காலம், தவத்தின் காலம் மட்டுமல்ல, அதோடு, கிறிஸ்து, தீமையை முழுமையாக வென்றதில் பங்குகொள்வதற்கும் உரிய காலம் என்றும், கிறிஸ்துவின் இந்த வெற்றி மட்டுமே, பெருந்தொற்றால் துன்புறும் மனித சமுதாயத்திற்கு மகிழ்வையும், மீட்பையும் கொணர முடியும் என்றும், கர்தினால் பியாசென்சா அவர்கள் கூறியுள்ளார்.

### தவக்காலம், பெருந்தொற்று

இவ்வாண்டு, ஒரே காலத்தில் இடம்பெறும், தவக்காலம், மற்றும், பெருந்தொற்று பற்றிய சிந்தனைகளை வழங்கியுள்ள கர்தினால் பியாசென்சா அவர்கள், தவக்காலம், திருவழிபாட்டு நாள்காட்டி மற்றும், திருஅவையின் வாழ்வைக் குறிக்கின்றது என்றும், பெருந்தொற்று, இன்றைய மனித சமுதாயத்தின் தியாக வாழ்வைக் குறிக்கின்றது என்றும் கூறியுள்ளார்.



திருஅவையின் மனசாட்சி பேராயத்தின் தலைவர், கர்தினால் மௌரோ பியாசென்சா

பெருந்தொற்று காலத்தில், உலகம் முழுவதும், குடிமக்கள், தங்களின் தனிப்பட்ட வாழ்வில், தங்களின் சுதந்திரத்தை கட்டுப்பாட்டுடன் செயல் படுத்தல், தேவையான நலவாழ்வு விதிமுறைகளுக்கு ஏற்ப, சொந்த வாழ்வுமுறையை தியாகம் செய்தல், மருத்துவமனையிலுள்ள தங்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு உதவுதல் உட்பட, அதிகாரிகள் அறிவித்துள்ள அறிவுரைகளுக்குக் கீழ்ப்படிதல் போன்றவற்றை ஆற்றவேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்படுகின்றனர் என்று கூறியுள்ளார், கர்தினால் பியாசென்சா.

நல்லதொரு வருங்காலத்தை அமைப் பதற்காக, விரைவில் நிகழப்போகிற ஆபத்தை கண்முன் கொண்டு, ஒவ்வொருவரும், தனக்கும் மற்றவருக்கும் பொறுப்பு என்ற உணர்வில் வாழ்வதற்கு, இதற்குமுன் நினைத்துப்பார்த்திராத அளவுக்கு குடிமக்கள் தியாகம் செய்ய ஊக்குவிக்கப்படுகின்றனர் என்று, கர்தினால் பியாசென்சா அவர்கள் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இந்த தியாக வாழ்வில் குறைந்தது ஒரு பகுதியாவது, தவக்காலத்தில், கிறிஸ்தவர்கள் மேற்கொள்ளவேண்டிய தவமாக உள்ளது என்றும், உண்மையான கிறிஸ்தவ தவம், தற்போதைய அவசரகால நெருக்கடியை உருமாற்றுகிறது என்றும் உரைத்துள்ள கர்தினால் பியாசென்சா அவர்கள், மனச்சான்றை பரிசோதிக்கவும், இறை வேண்டல், நோன்பு மற்றும், தர்மம் செய்வதன் வழியாக, கடவுளோடும், நம்மோடும், பிறரோடும் நல்லுறவை வளர்க்கவும், திருஅவையின் ஆன்மீக மரபு அழைப்பு விடுக்கின்றது என்று கூறியுள்ளார்.

**மேரி தெரேசா: வத்திக்கான் செய்திகள்**

# விடியலைத் தேடிய குருத்துவப் பயணம்

## திருத்தொண்டர் பொனவெஞ்சர் இராயப்பன்

**கிள்ளான்:** பிப்ரவரி திங்கள் 27-ம் திகதி, சனிக்கிழமை அன்று தமது குருத்துவ அருள்பொழிவை ஏற்கவுள்ள திருத்தொண்டர் பொனவெஞ்சர் இராயப்பன் அவர்கள் மலேசிய திருஅவைக்கு இறைவனின் மற்றுமொரு கொடையாக அருள்பணி வாழ்வுக்குத் தன்னை அர்ப்பணிக்கிறார். 'வாருங்கள் மகிழ்ந்து பேருவகைக் கொள்வோம்' (மத் 5:12)

சிலாங்கூர் மாநிலத்தின் கிள்ளான் நகருக்கு அருகில் உள்ள கம்போங் ஜாவா என்பது திருத்தொண்டர் பொனவெஞ்சர் அவர்களின் சொந்த ஊர். 35 வயது நிரம்பிய இவர் திரு இராயப்பன், திருமதி சலேத்மேரி ஆகியோரின் மூன்று பிள்ளைகளில் மூன்றாவது பிள்ளையாக ஓர் அண்ணன், ஓர் அக்காள் என இவரது குடும்பம் ஒரு குட்டித் திருஅவையாகும்.

தமது வசிப்பிடத்தில் இருக்கும் கம்போங் ஜாவா. பத்து அம்பாட் தமிழ்ப்பள்ளியில் தனது தொடக்கக் கல்வியைத் தொடங்கிய தாகக் கூறும் திருத்தொண்டர் தமிழ்மொழி ஆளுமையின் பொருட்டு இவரது குருத்துவப் பணி தமிழ்பேசும் இறைமக்களுக்கு ஒரு சிறப்பு கொடை என்றே கூறவேண்டும்.

இடைநிலைப் பள்ளி கல்வியைக் கிள்ளான், லா சால் பள்ளியில் தொடர்ந்த இவர் சிறுவயது முதல் கத்தோலிக்க நம்பிக்கை வாழ்விலும் ஆழ்ந்திருந்தார் என்று கூறுவதில் மகிழ்கிறார். . இங்குள்ள லூர்து அன்னை பங்கில் பலிபீடச் சேவகராகவும், பிற்காலத்தில் மறைக்கல்வி ஆசிரியராகவும், பங்கில் சில வேறு பணிகளிலும் ஈடுபட்டிருந்தார். அவ்வப்போது தமது கம்போங் ஜாவா அடிப்படை திருஅவை சமூகத்திலும் ஓர் இளைஞராகச் சில பணிகளிலும் பங்கேற்று வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

அக்காலக் கட்டத்தில், இவரது தந்தை திரு. இராயப்பன் அவர்கள் 'இன்ப ஜோதி' எனும் பெயரில் ஒரு நிறுவனத்தை கொண்டு வாடகைக்குக் கூடாரம் அமைக்கும் வியாபாரம் செய்து வந்தார். இவரது தாயாரோ இல்லத்தரசி. ஆகவே குடும்ப நலன் கருதி இவரது தந்தை இரவும் பகலுமாக உழைக்க வேண்டியிருந்தது. முயற்சி திருவினையாக்கும் எனும் பழமொழிக்கேற்ப, இன்ப ஜோதி செழிப்புற்று வியாபாரத்தில் முன்னேறிக் கொண்டிருந்தது. இரு மகன்களின் கவனமும் சிறிது சிறிதாக வியாபாரத்தில் மையமிடத்துவங்கியது.

தொடர்ச்சி, அடுத்தப் பக்கம்



# கடவுளின் அழைப்பில் குருத்துவம் ஏற்கிறார் திருத்தொண்டர்- தொடர்ச்சி

திருத்தொண்டர் இளம்பருவத்திலேயே தந்தைக்கு உதவியாக வியாபாரத்தில் கவனம் செலுத்தத் தொடங்கினார். நாளுக்குநாள் வியாபாரத்தில் ஆர்வம் பெருகியதாலும், ஒவ்வொரு நாளும் கையில் ரொக்கப் பணம் இருந்து கொண்டிருந்ததாலும், அக்காலக் கட்டத்தில் ஆன்மீகத் தேவையில் ஈடுபாடு குறையத் தொடங்கியது உண்மையே. இவரது மூத்த சகோதரர் வேறொரு வியாபாரத்தில் ஈடுபட்டிருந்ததால், இவர்




*பெற்றோரின் 30-ஆம் ஆண்டு திருமண நிறைவு விழாவில் குடும்பத்துடன் திருத்தொண்டர்*

தனது தந்தையின் வியாபாரத்தை மேலும் பெருகச் செய்ய முனைந்தார். இளம் கன்று பயமறியாது என்பதற்கு ஏற்ப, வியாபாரத்தில் முன்னேற வேண்டும் என்ற துணிவு அதிகமாகக் கொண்டிருந்தார்.

ஆனாலும், தொடர்ந்து இடையிடையே நிகழ்ந்த சிறு சிறு சம்பவங்கள் இவரது கவனத்தைத் திசைத்திருப்பும் வகையில் அமைந்தன என்றால் மிகையாகாது. ஒரு காலக்கட்டத்தில் இவரது தாயாரை வாரந்தோறும் திருப்பலிக்கு அழைத்துச் செல்ல வேண்டிய நெருக்கடி இவருக்கு ஏற்பட்டது. இதனிமித்தம் திருப்பலியில் கலந்துகொள்ள வேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்பட்டது. சில வேளைகளில் ஆலயத்துக்கு வெளியே நின்று திருப் பலியில் பங்கெடுத்தவர், ஆலயத்துக்குள் அமர்ந்து திருப்பலியில் பங்கெடுக் கலானார். இது ஒரு திருப்புமுனை எனலாம். இது இவரது தாயாருக்கு மட்டற்ற மகிழ்ச்சியைத் தந்தது. ஒருவகையில் புனித மோனிக்கம்மாள் அவர்களின் இடைவிடா வேண்டுதலால் அவரது மகன் புனித அகுஸ்தினாருக்கு ஏற்பட்ட மனமாற்றம் போல் எனது வாழ்க்கைச் சூழலிலும் தாயாரின் வேண்டுதலால் ஆன்மீக ரீதியில் மாற்றம் ஏற்படத்துவங்கியது என்று மனமுவந்து கூறினார்.

ஒரு நாள் கிள்ளான், லூர்து அன்னை பங்கில் திருப்பலி தொடங்கும் வேளையில், பக்கவாதம் கொண்டிருந்த அருள்தந்தை அ.. அமலநாதன் அவர்கள் தட்டுத்தடுமாறி, திருப்பீடத்துப் படிகள் ஏறிச் சென்ற காட்சி இவரது மனதை உலுக்கியதாகவும், அந்த கனம் மெய்சிலிர்த்துப் போனதாகவும் இவர் மேலும் பகிரந்துகொண்டார். வயதான ஒரு குருவானவர், தட்டுத்தடுமாறி படிகள் ஏறிச் சென்று இறைமக்களுக்குப் பணி செய்யத் துணியும் போது, எனக்கென்ன குறைவு? நான் ஏன் இப்பணியை ஏற்கக் கூடாது? போன்ற வினாக்கள் அடிக்கடி இவரது மனதில் தோன்றி மறைந்ததாகக் கூறினார். அப்போது இவருக்கு வயது 22.

இந்நிலையில், அதே கம்போங் ஜாவா வட்டாரத்தைச் சேர்ந்தவரும், அக்காலக் கட்டத்தில் பினாங்கு குருத்துவக் கல்லூரியில் பயின்றுகொண்டிருந்த மாணவருமான சகோ. வின்சன் தோமஸ் ஒருநாள் இவரது வீட்டிற்கு வந்திருந்த வேளை, குருத்துவத்தில் தமக்கு ஏற்பட்ட ஆர்வத்தைப் பகிர நேரிட்டது. இப்பகிர்வு இவரது எதிர்கால வாழ்வுக்கு ஒரு திருப்பு முனையாக அமைந்தது என்றார். பின்னர், அருள்தந்தை ஆல்பர்ட் ஆரோக்கியசாமி அவர்களிடம் மேலும் கலந்தாலோசித் ததாகக் கூறினார்.

சிற்பிக்குள் முத்து என்பதுபோல், எளியக் குடும்பத்தில் தோன்றிய இந்த முத்தை கடவுள் சிறிது சிறிதாக வெளிக் கொணர்ந்தார். அடுத்து அருள்தந்தை ஆல்பர்ட் ஆரோக்கியசாமி அவர்களின் ஆலோசனையின் பேரில், கோலாலம்பூர் மாமறைமாவட்டத்தின் இறையழைத்தல் பணிக்குழுவிற்குத் தலைமைப் பொறுப் பேற்றிருக்கும் அருள்தந்தை கிறிஸ்தபர் சூசைபிள்ளை அவர்களைச் சந்தித்தப் போது, அவர் ஆங்கிலமொழி புலமையை மேலும் வளர்த்துக்கொள்ள வேண்டும் என தனக்கு ஆலோசனை கூறியதாகத் தெரிவித்தார். எனவே, அடுத்து தனியார் மொழிக்கழகத்தில் ஆங்கிலம் கற்க முற்பட்டார். பின்னர், ஆங்கில மொழியில் சிறப்புத் தேர்ச்சிப்பெற்றதன் காரணமாக, குருத்துவக் கல்லூரியில் தங்குத்தடையின்றி இணைந்தார். கல்லூரிப் படிப்பும் தொடர்ந்தது. நான்காம் ஆண்டில் பயின்று கொண்டிருந்த வேளையில் நோயுற்றிருந்த அன்புத் தாயார் இயற்கை எய்தினார். தாயாரின் பிரிவும் சோகமும் இவரை ஆட்கொண்ட வேளையில், நெருங்கிய உறவினர், நண்பர்கள் அளித்த ஆறுதல் வார்த்தைகள் மேலும் எனக்குத் தெம்பூட்டியது என்றார் திருத்தொண்டர். புனித மோனிக்கம்மாள் போல் இவரது தாயாரின் ஆசியும் தந்தையின் அரவணைப்பும் உடனிருக்க கடவுளின் துணையாளும் அன்னை மரியாவின் இடைவிடா பரிந்துரையாளும் குருத்தவக் கல்வியை இனிதே முடித்தார்.

ஏறக்குறைய பத்து ஆண்டுகள் தூய ஆவியாரின் துணையோடு பயணித்து, 'உங்கள் தந்தை இரக்கமுள்ளவராய் இருப்பது போல நீங்களும் இரக்கம் உள்ளவர்களாய் இருங்கள்' (லூக்கா 6:36) எனும் கருபொருளோடு எனது அருள்பணி திருநிலைப்பாட்டுக் கொண்டாட்டத்தை மகிழ்ச்சியோடு எதிர்ப்பார்த்திருக்கிறேன்' என்று மேலும் கூறினார் திருத்தொண்டர்.

நிறைவாக, இதுவரை பத்து அருள்பணியார்களைத் திருஅவைக்கு ஈன்றுள்ள கிள்ளான் புனித லூர்து அன்னை பங்கில் பதினோராவது அருள்பணியாளாராகத் தனது குருத்துவ அருள்பொழிவு நடைபெறுகிறது என்றும் இத்திருப்பயணத்தில் உறுதுணையாக இருந்த ஆயர்கள், அருள்பணியாளர்கள், அருள்சகோதர-சகோதரிகள், இறைவேண்டல் செய்த அனைவருக்கும். கடவுளுக்கும் இருகரம் கூப்பி நன்றியை தெரிவித்துக்கொண்டார திருத்தொண்டர்.

பேட்டி : ஆர்.கே.

## 'மரியாவும் நம்பிக்கையும்' கருபொருளில் புனித லூர்து அன்னை திருவிழா கொண்டாடப்பட்ட்து.

**கிள்ளான்**: இங்குள்ள புனித லூர்து அன்னை பங்கின் ஆண்டுத் திருவிழா கடந்த ஆண்டுகளைப் போலல்லாமல், நிர்ணயிக்கப்பட்ட பொது நடமாட்ட நெறிமுறைகளுக்கேற்ப (MCO) இவ்வாண்டு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. கடந்த 05-02-2021, வெள்ளிக்கிழமைத் தொடங்கி, 14-02-2021, ஞாயிற்றுக்கிழமை வரை செபமாலை, நவநாள் திருப்பலிகள் யாவும் இயங்கலை (online) வாயிலாக நிறைவேற்றப் பட்டன. **"மரியாவும் நம்பிக்கையும்"** எனும் பொதுக் கருப்பொருளை மையமாகக்கொண்டு ஒவ்வொரு நாளும் நம்பிக்கை, நிச்சயமின்மை, உறுதி, திடநம்பிக்கை, மனமாற்றம், விடாமுயற்சி, நிரந்தரம், உறவு மற்றும் சாட்சியம் என ஒன்பது இணை கருபொருள்களோடு நவநாள்களும் திருப்பலிகளும் நிறைவேற்றப்பட்டன.

இவ்வாண்டு, Msgr அருள்தந்தை மிச்சல் அந்தோணி, அருள்தந்தை கிளமெண்ட் லிம், பங்குத் தந்தை பெஃடரிக் ஜோசப் ஆகியோர் ஒவ்வொரு நாள் திருப்பலிக்கும் தலைமையேற்க, திருத்தொண்டர் பொனவெஞ்சர் அவர்களும் மறையுரைகள் வழங்கினார். தொடரந்து, 14-02-2021, சனிக்கிழமையன்று விழாத்



திருப்பலிக்கு கோலாலம்பூர் மாமறைமாவட்டத்தின் பேராயர் ஜூலியன் லியாவ் அவர்கள் தலைமை - யேற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

நிறைவாக, பங்குத்தந்தை பெஃடரிக் ஜோசப் அவர்கள் இவ்வாண்டு பங்குத் திருவிழா கோவிட்-19 தொற்றால் தடைபடமால், நேரடி ஒலிபரப்புகள் வழி கொண்டாடப்பட்டதற்கு உதவி புரிந்த பங்கு மக்கள் உட்பட அனைவருக்கும், பணிக்குழுக் களுக்கும், குறிப்பாக திருப்பலிகள் கொண்டாடிய கிள்ளான் வட்டார அருள்தந்தையர்களுக்கும், சிறப்பு வருகை புரிந்த பேராயர் அவர்களுக்கும், நன்றி மாலை சூட்டினார்.

-K. ஜோன்

# சீடத்துவம் சிறக்க உருமாற்றம் உறுதியாகட்டும்

தவக்காலத்தின் இரண்டாவது வாரத்திற்குள் நாம் நுழைகிறோம். கடவுளுக்குக் கீழ்ப்படிவோருக்கு வல்லமையையும் ஆற்றலையும் நன்மனதையும் இறைவன் தருவார் என்பது இன்றைய வாசகங்களில் தியானித்து உணரலாம்.

நீ அதிகம் அன்பு செய்யும் உன் ஒரே மகனை... எனக்கு தகனப் பலியாய் ஒப்புக்கொடுப்பாய் (தொ.நூ.22:2) என்பது ஆபிரகாமுக்கு இறைக்கட்டளையாக வருகிறது. இறைவனில் அதிகம் நம்பிக்கைக் கொண்டுள்ளோருக்கு அவர் சோதனைகளை அனுமதிக்கிறார் அவர்களைத் தண்டித்தும் திருத்துகிறார். (எபி.12:5-11).

எல்லா நிலையிலும் ஆபிரகாம் கடவுளுக்குக் கீழ்ப்படிந்ததன் காரணமாக, கடவுளும் அவரோடு எப்போதும் உடனிருந்தார். துன்ப துயரங்கள் நம்மை வாட்டும் போது இறைவனின் கரத்தைக் காண்கிறோமா? பலவகை சோதனைளுக்கு நீங்கள் உள்ளாகும் போது அவை எல்லாம் மகிழ்ச்சி என்றே எண்ணுங்கள். உங்கள் நம்பிக்கை சோதிக்கப்படுவதால் மனவுறுதி விளையும் என்பது உங்களுக்கு தெரிந்ததே (யாக்.1:2) என்று நமக்கு அறிவுறுத்தப் பட்டிருக்கிறது.

இன்றைய இரண்டாவது வாசகத்தில், "கடவுள் நம் சார்பில் இருக்கும்போது, நமக்கு எதிராக இருப்பவர் யார்?" எனும் வினாவை பவுல் அடிகள் முன் வைக்கிறார். ஆபிரகாமின் வாழ்வில் கடவுள் அவர் பக்கம் இருந்தார். ஆபிரகாம் அந்த நம்பிக்கையால் நாடுவிட்டு நாடு வந்தார். அவர் இறைவன் மீது கொண்டிருந்த நம்பிக்கையையும் அன்பையும் காட்டவும் இறைவனின் திருவுளத்தை நிறைவேற்றவும் எதையும் செய்ய தயங்கவில்லை.

இயேசுவின் உருமாற்றத்தை விவரிக்கும் இந்த தோற்றமாற்ற நிகழ்வில் எலியா இறைவாக் கையும் மோசே திருச் சட்டங்களையும் நினைவூட்டுகின்றனர். அதாவது, இயேசுவே இறைவாக்கு களுக்கும் சட்டங்களுக்கும் மையமாக இருக்கிறார் என்பதை நாம் அறிகிறோம். இந்நிலையில், பேதுருவோ மலையில் இருப்பதுதான் நல்லது என்கிறார். அதாவது மலைக்குக் கீழே உள்ள உலகம் சாதாரண உலகம் அது வேண்டாம் என்பது போல இருக்கிறது அவருடைய வாதம். ஆண்டவரோ, மலையின் உச்சியில் கிடைக்கும் மகிழ்சிசியைவிட மக்களோடு மக்களாக வாழ்வதில் கிட்டும் மகிழ்ச்சியை மெச்சியவராகக் கீழே கூட்டிவருகிறார். ஆம், ஆண்டவர் ஆராதனை பெறுவதைவிட சாதாரண மக்களின் துயர் துடைக்கும் பணியையே விரும்புகிறார் என்பது தெளிவாகிறது. தலைமைக் குருக்களாலும் மறைநூலறிஞர்களாலும் புறகணிக்கப்பட்டு, பாடுகள் பட்டு, சிலுவையில் அறையப்பட்டு, அவர் இறக்க வேண்டியிருக்கும் துன்பத்தை ஏற்பதே அவரது முதன்கண் பணி என்பதை விளக்குகிறார்.

நம்முடைய வாழ்விலும் துன்ப துயரங்கள் மத்தியில் இறைவன் தம் மலையை காண்பிக்கிறார். அது துன்ப துயரங்களில் நாம் அவரது திரு கரத்தின் வல்லமையையும், அவரது உடனிருப்பையும், மாட்சியையும் நமக்கு காட்டும் தன்மை உடையன என்பதை உணர்ந்து துன்ப துயரங்களை விரும்பி ஏற்போம். கிறிஸ்து பணி பெறுவதற்கு அன்று பணி புரியவும் மக்களுடைய மீட்புக்கு விலையாக தம் உயிரைக் கையளிக்கவும் வந்தார். நமது வாழ்விலும் பணியிலும் நாம் துன்புறும் போதெல்லாம் உலகைப் பற்றிக்கொள்மால், அனைத்தும் கடவுளின் மாட்சிக்கு என்பதை உணர்ந்து அவர் திருவுளத்திற்குப் பணிந்து நடப்போம். எனக்கு உறுதி ஊட்டும் இறைவனால் எதையும் செய்ய எனக்கு ஆற்றலுண்டு (பிலி.4:13) என்று துணிவாக கூறுவோம். இயேசுவின் உருமாற்றமானது, இயேசு மெய்யான இறைவனும், மெய்யான மனிதனுமாவார் என்னும் நம்பிக்கையை நம்மில ஆழப்படுத்துகிறது

இயேசு கொண்டிருந்த இலட்சிய இலக்கு நம் அனைவரிலும் இருக்க வேண்டும். ஏதோ பிறந்தோம், வாழ்ந்தோம், மடிந்தோம் என்றில்லாமல், நமக்குள்ளாக சீடத்துவத் திற்கான இலட்சியத்தையும், குறிக்கோளை யும் கொண்டு கீழே இறங்கி வர அழைக்கிறார் இயேசு. எதிர்ப்புக்களை, பிரச்சனைகளை எதிர் கொண்டு சீடத்துவ வாழ்வைத் தற்காப்பொம்.

*-M. செல்வராஜூ, மலாக்கா*

**தவக்காலம் 2-ம் வாரம்**

தொ.நூல்: 22: 1-2, 9-13, 15-18
திபா: 116: 10,15. 16-17. 18-19
உரோ: 8: 31b-34
மாற்கு:9: 2-10

**ஞாயிறு வாசகம்: ஆண்டு 2**

**வாரநாள் முதல் வாசகம்: I**

**திருப்புகழ் மாலை : வாரம் 2**